14 தினகரன்
திருச்சி 5 டிசம்பர் 2010

# வெப்பமயமாதல் குறித்து விழிப்புணர்வு

திருச்சி டிச. 5: உலக வெப்பமயமாதலை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து மேக்ட்–வேர்கள் குழந்தைகள் இயக்கம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி திருச்சி காதி கிராப்ட் அருகில் நேற்று நடந்தது.

மேக்ட் அமைப்பின் பொருளாளர் ராகவேந்திரன் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். மேக்ட் இயக்குநர் சிரில் அலெக்சாண்டர், தலைவர் மணிமேகலை, ஒருங்கிணைப்பாளர் எலிசபெத் மற்றும் 30க்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியின் போது, புவி வெப்பமயமாதலின் பாதிப்பு, தடுத்தல் முறை, மரம் நடுவதன் அவசியம் பற்றி உறுதிமொழி எடுத்து கொண்டனர்.